**தூத்துக்குடி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(ஜுன் 20-ம் தேதி முதல் ஜுன் 24-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (16.6.15- 18.6.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34- 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26- 29 |
| வானம் (ஆக்டா) | 7- 8 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 77- 86 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 53- 72 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 23- 31 |
| காற்றின் திசை | 290 |

**24.6.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 20.6.15 | நாள் 2 21.6.15 | நாள் 3 22.6.15 | நாள் 4 23.6.15 | நாள் 5 24.6.15 |
| மழை (மி.மீ.) | 1 | 2 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 35 | 35 | 36 | 36 | 36 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 28 | 28 | 28 |
| வானம் (ஆக்டா) | 7 | 7 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 70- 85 | 70- 85 | 60- 80 | 60- 80 | 60- 80 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 25/ தென்மேற்கு | 25/ தென்மேற்கு | 25/ தென்மேற்கு | 25/ தென்மேற்கு | 25/ தென்மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், மிதமான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| நெல் | துரித தூர்கட்டும் பருவம் | துரித தூர்கட்டும் பருவத்திலுள்ள நெற்பயிருக்கு அசோஸ்லா நுண்ணுயிர் உரத்தை நட்ட 30ம் நாளில் களையெடுக்கும்போது மண்ணோடு சேர்க்கவும். இப்பருவத்தில் தழைச்சத்து இடுவது மிக முக்கியமாதலால் இலை வண்ண அட்டையை பயன்படுத்தி இலையின் வண்ணத்தை கண்காணித்து தேவைக்கேற்ப தழைச்சத்து உரமிடவும். பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தும் |

| | | |
|---|---|---|
| | | விதத்தில் மண்ணில் முடி அளவு தடிமன்கொண்ட வெடிப்புகள் தோன்றிய பின்பு 2.5 செ.மீ. அளவு நீர் பாய்ச்சவும். |
| பாசிப்பயறு | நாற்று பருவம் | இறவை பாசிப்பயறில் போதிய பயிர் எண்ணிக்கையை பராமரிக்க விதைத்த 15-ம் நாளில் அதிகப்படியான செடிகளை களைந்து குத்து ஒன்றுக்கு ஒரு ஆரோக்கியமான செடி என்ற அளவில் பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும். விதைத்த 3ம் நாளில் களை முளைப்பதற்கு முன்பு இடப்படும் களைக்கொல்லி இடவில்லையெனில் விதைத்த 15-ம் நாளில் கைக்களை எடுக்கவும். |
| கத்தரி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | கத்தரியில் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறை அளிக்கவும். ஒவ்வொரு உரப்பாசனத்திற்கும் 12- 61 - 0 உரம் 0.69 கிலோ/ எக்டர், 13- 0-45 உரம் 2.47 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 3.96 கிலோ/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். |
| கரும்பு | துரித வளர்ச்சி பருவம் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக காற்றின் வேகத்தை ஒட்டி பயிர் சாயாமல் தடுப்பதற்காக கரும்பில் அடுத்தடுத்த வரிசைகளில் உள்ள பயிர்களின் தோகையை ஒன்றோடொன்று கட்டவும். வாழைக்கு முட்டு அணைக்கவும். |
| வாழை | பூ மொட்டு உருவாகும் பருவம் | |

குறுஞ்செய்தி- ஜுன் 20& 21-ல் மழை: 1 & 2 மி.மீ. இறவை பாசிப்பயறு- அதிகப்படியான செடிகளை களையவும்; விதைத்த 3ம் நாளில் களைக்கொல்லி இடவில்லையெனில் 15-ம் நாளில் கைக்களை எடுக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி